# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, THENI.

**M.C.O.P.No. 94/2024**

Deposition of Witness : PW-1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | மேகலா | Father's Name | : | சுரேஷ்குமார் |
| Village | : | | Taluk | : | |
| Caste | : | | Calling | : | |
| Religion | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act No.44 of 1969 of the day of 25-03-2025

சாட்சி இன்று அழைக்கப்பட்டு திருமதி.S. வனிதா, கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் அவர்களால் உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

முதல் விசாரணை– தொடங்கப்பட்ட நேரம் : 4.00 பி.ப.

நான் இம்மனுவின் மனுதாரர் ஆவேன். நான் இன்று நீதிமன்றத்தில் எனது எழுத்துமூலமான நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் என்னால் சொல்லப்பட்டவைகள் தான். அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையது தான்.

| | | | |
|---|---|---|---|
| 1 | - | விபத்து சம்பந்தமான முதல் தகவல் அறிக்கையின் உண்மை நகல் | ம.சா.ஆ–1 |
| 2 | - | KA 03 NS 0642 காரின் பதிவு சான்றிதழ் நகல் | ம.சா.ஆ–2 |
| 3 | - | KA 03 NS 0642 காரின் காப்பீட்டு சான்று ஜெராக்ஸ் நகல் | ம.சா.ஆ–3 |

| | | | |
|---|---|---|---|
| 4 | - | 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் ஜெராக்ஸ் நகல் | ம.சா.ஆ–4 |
| 5 | - | நரேன் என்பவரின் பிரேத பரிசோதனை அறிக்கை ஜெராக்ஸ் நகல் | ம.சா.ஆ–5 |
| 6 | - | நரேன் என்பவரின் இறப்பு சான்றிதழ் இணையவழி நகல் | ம.சா.ஆ–6 |
| 7 | - | நரேன் என்பவரின் வாரிசு சான்றிதழ் இணையவழி நகல் | ம.சா.ஆ–7, |
| 8 | - | 1ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் | ம.சா.ஆ–8 |
| 9 | - | 2ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் | ம.சா.ஆ–9. |
| 10 | -- | 1ம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தக நகல் | ம.சா.ஆ–10 |
| 11 | - | 2ம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தக நகல் | ம.சா.ஆ–11 |
| 12 | - | TN 60 AL 3057 என்ற இருசக்கர வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை இணையதள நகல் | ம.சா.ஆ–12 |
| 13 | - | KA 03 NS 0642 காரின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை இணையதள நகல் | ம.சா.ஆ–13 |
| 14 | - | குற் ற இறுதி அறிக்கை இணையவழி நகல் | ம.சா.ஆ–14 |
| 15 | - | ரமேஷ் விஜி ராமமூர்த்தி என்பவரின் ஆதார் அடையாள அட்டை நகல் (கண்ணுற்ற சாட்சி) | ம.சா.ஆ–15 |

மனுப்படி தீர்ப்பாகுமாறு பிரார்த்திக்கிறேன்.

(ம.சா.ஆ–8 முதல் 11 அசல் ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டு, ஒப்பீடு செய்யப்பட்டு, நகல் ஆவணம் குறியீடு செய்யப்பட்டது.)

(1 முதல் 11 ஆவணங்கள் அசல் மனுவில் குறிப்பிடப்பட்ட ஆவணங்கள், 12 முதல் 15 ஆவணங்கள் உரிமையியல் நடைமுறைச்சட்ட கட்டளை 7 விதி 14(3)ன் படியாக மனுதாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டு ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டது.

**1,2 –ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:** தொடங்கப்பட்ட நேரம் :4.00

இந்த விபத்தை நான் நேரில் பாத்த்தேனா என்றால் பார்க்கவில்லை என்றால் சரிதான்.இத இந்த விபத்து குறித்து யார் புகார் கொடுத்தார்கள் என்றுஎனக்கு தெரியுமா என்றால் தெரியும் எனது வீட்டுக்கார் கொடுத்தார். விபத்து சமயத்தில் எனது மகன் என்ன படித்துக்கொண்டிருந்தார் என்றால் 11 ம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தார்.

**3–ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:**

விபத்து சம்மந்தமான புகாரை யார் கொடுத்தார் என்றால் கணவர் தான் கொடுத்தார். எனது கணவர் விபத்தை நேரடியாக பார்த்தாரா என்றால் இல்லை. ரமேஷ் என்பவர் பார்த்தார். விபத்து சமயத்தில் என் மகன் நரேன் இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்து பயணம் செய்தார் மேற்படி வாகனத்தை நவீன் என்பவர் ஓட்டினார் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் இருசக்கர வாகனத்தை ஒட்டிய நவீனும் என் மகன் நரேனும் ஒன்றாக பள்ளியில் படித்தார்கள் என்று சொன்னால் சரிதான். விபத்து சமயத்தில் நவீனின் வயது 16 என்று சொன்னால் சரிதான். என் மகன் நரேன் விபத்து சமயத்தில் பத்தாம் வகுப்பு தேர்ச்சி அடையாமல் திரும்ப பத்தாம் வகுப்பு படித்துக்

கொண்டிருந்தார் என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தை ஓட்டிய நவீனுக்கு விபத்து சமயத்தில் ஓட்டுநர் உரிமம் இல்லை மைனர் என்பதால் அவருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்று சொன்னால் சரிதான். பிரமாண வாக்கு மூலத்தில் விபத்து எப்படி நடந்தது என்பது குறித்து நான் சொல்லியுள்ள விஷயங்கள் யார் சொல்லி நான் தாக்கல செய்துள்ளேன் என்றால் ரமேஷ் என்பவர் சொல்லி நான் அதன் அடிப்படையில் தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். வீரப்ப அய்யனார் கோவிலுக்கு செல்லும் ரோடு செல்லும் ரோடு என்றால் சரிதான். அந்த ரோடு பள்ளமேடு அதிகமாக உள்ள ரோடு என்று சொன்னால் சரியா தவறா என்றால் சரிதான். அந்த ரோடு குறுகலான ரோடு என்று சொன்னால் சரிதான். விபத்து சமயத்தில் எனது மகனும் இருசக்கர வாகனத்தை ஓட்டிய நபரும் தலைக்கவசம் அணியவில்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. வாகன விபத்து சம்பந்தமான வழக்கில் இருசக்கர வாகனத்தின் உரிமையாளர் மற்றும் அதன் காப்பீட்டு நிறுவனத்தை தகுந்த கட்சிக்காரராக சேர்க்காத தோஷத்திற்காகவே மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. இந்த விபத்து சமயத்தில் எனது பையன் பயணம் செய்த இருசக்கர வாகனத்தின் ஓட்டுநர் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் மற்றும் ஓட்டுநர் உரிமம் இல்லாமலும் சாலை விதிகளை கடைபிடித்து இருசக்கர வாகனத்தை ஓட்டாமலும் இந்த விபத்துக்கு அவருடைய கவனக்குறைவு காரணம் என்று சொன்னால் அதுபற்றிஎனக்கு தெரியாது. மேலும் விபத்து சமயத்தில் எனது மகன் எந்த தொழிலும் பார்க்கவில்லை மாதச் சம்பளம் பெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்து சமயத்தில் கார் ஓட்டுநர் சாலை விதிகளை கடைப்பிடித்து மெதுவாக தான் வண்டியை ஓட்டிட்டு வந்தார் என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்திற்கு காரணம் எனது பையன் அமர்ந்து சென்ற இருசக்கர வாகனத்தின் ஓட்டுனரின் கவனக்குறைவு என்பதால் இந்த 3 ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்துக்கு காரணம் எனது பையன் பயணம் செய்த

இருசக்கர வாகனத்தின் ஓட்டுநரின் கவனக்குறைவால் ஏற்பட்டதால் அதனுடைய உரிமையாளரும் அதன் காப்பீட்டு நிறுவனம் தான் உங்களுக்கு இழப்பீடு தொகை தர கடமைப்பட்டவர்கள் என்று சொன்னால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளின் கீழ் நான் கேட்டுள்ள இழப்பீட்டு தொகை அனைத்தும் அதிகம் அது எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம் : 4.26 பி.ப.

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

SARAVANAKUMAR GN

Digitally signed by SARAVANAKUMAR GN
DN: email=gnsaravanakumar@aij.gov.in, cn=SARAVANAKUMAR GN, c=IN
Date: 2025.03.25 19:43:23 +0530

Motor Accident Claims Tribunal
(Chief Judicial Magistrate Court)
Theni.
Date: 25-03-2025